ராணி
காமிக்ஸ்
007 ஜேம்ஸ்பாண்ட் தோன்றும்
தங்கத் துப்பாக்கி
தீபாவளி மலர்
ரூ 2

அய்யன்
பட்டாசுகள்
வண்ண வாணங்கள்
வானளாவிய புகழ்
அய்யன்
பட்டாசுகள்
வண்ண வாணங்கள்
அய்யன்
பயர் ஒர்க்ஸ்
பாக்டரி (பி) லிமிடெட்.
தபால் பெட்டி எண்: 378.
சிவகாசி-626 123.
BUNNY BRAND
FANCY FIREWORKS
சில பாதுகாப்பு குறிப்புகள்:
• பட்டாசுகள் வெடிக்கும்போது செயற்கை இழை ஆடைகள் அணிவது ஏற்றதல்ல.
• பட்டாசுகளை நெருக்கமாய் வைத்து வெடிக்காதீர்கள்
• கையில் பிடித்துக் கொளுத்தி வீசுவது சரியல்ல.
• வீட்டுக்கு உள்ளேயோ, அருகாமையிலேயோ வெடிக்காதீர்கள்.
• ராக்கெட்டுகளை சரியான திசையில் விட பாட்டில்களைப் பயன்படுத்துங்கள்

தீபாவளி

தீபாவளி வந்தாலே சிறுவர்களுக்குக் கொண்டாட்டம்தான். புத்தாடை அணிந்து பட்டாசு கொளுத்துவதில் அவர்கள் அடையும் ஆனந்தமே அலாதி!

ஐப்பசி மாதத்தில் வரும் அமாவாசை நாளையொட்டி இவ்விழா கொண்டாடப்படுகிறது. காலையில் எழுந்து தீபம் ஏற்றி வைத்து லெட்சுமியை வணங்குகிறார்கள். எண்ணெய், வெற்றிலை, பாக்கு, பழம் தின்பண்டங்கள் முதலியவற்றைப் படைத்து வழிபடுகிறார்கள். தலையில் தேய்த்துக்கொள்ளும் எண்ணெயில் லெட்சுமி இருப்பதாகவும், அன்று நீராடும் வெந்நீரில் கங்கை இருப்பதாகவும், அதனால் கங்கையில் நீராடிய பலன் கிடைக்கிறது என்றும் கருதுகிறார்கள்.

இத்திருநாளில் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் வாழ்த்துத் தெரிவித்து பரிசுப் பொருட்களும் வழங்கி அறுசுவையுடன் விருந்து உண்ணுவது ஒரு சிறப்பாகும்.



தீபாவளி ஏன் கொண்டாடப்படுகிறது?

தீபாவளி கொண்டாடுவதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகிறது.

நரகாசூரன் என்ற கொடிய அரக்கன் தேவர்களை வாட்டி வதைத்து கொடுமை செய்தான். அவர்கள் கிருஷ்ணனிடம் சென்று முறையிட்டார்கள். உடனே கிருஷ்ணர் கோபம் கொண்டு நரகாசூரனை அழித்தார். நரகாசூரன் சாகும் பொழுது, கிருஷ்ணரிடம், "நான் இறக்கும் இந்நாளை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். அந்நாளே தீபங்கள் ஏற்றி தீபாவளி திருநாளாக கோலாகலமாக கொண்டாடப்படுகிறது என்று இங்கே கூறுகிறார்கள்.

ஆனால், வடக்கே கூறப்படும் கதை வேறு.

இராமன் இராவணனை தோற்கடித்துவிட்டு அயோத்தி வந்தபொழுது அயோத்தி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் நகரத்தை அணி செய்து, இரவில் தீபம் ஏற்றி விழா கொண்டாடினார்கள். அதுவே இப்பொழுது தீபாவளி திருநாளாகக் கொண்டாடப்படுகிறது என்று வடக்கே சொல்லுகிறார்கள்.

தீப திருநாள்!



அங்கே இப்படி!

மகாராஷ்டிராவில் இந்துக்கள் தீபாவளி அன்று மகாபலிச் சக்கரவர்த்தியின் உருவத்தை வைத்து வழிபடுகிறார்கள்.

வங்காள மக்கள் அன்று காளி பூஜை செய்கிறார்கள்.

ராணி காமிக்ஸ்–152
(மாதம் இருமுறை இதழ்)
TV
அக்டோபர் 16–31
1990

அந்த புல்லட் ஜமைக்காவில் இருந்து வந்திருக்கிறது.
நமது ஆளின் உடலில் பாய்ந்த புல்லட், இது. இதுவும் தங்க புல்லட்!
இரும்பு புல்லட்டை விட தங்க புல்லட் சத்தமே இல்லாமல் ஆளைக் கொன்றுவிடுகிறது!
அந்தக் கோப்பு கிடைத்ததா, மிஸ் மோனி?
எஸ், சார். ஜமைக்காவில் தங்க புல்லட் பாய்ந்து நம் ஆட்கள் இதுவரை ஏழு பேர் இறந்திருக்கிறார்கள்!
நம் ஆட்கள் இப்படி அநியாயமாக சாவதைத் தடுக்க முடியாதா?
007 ஜேம்ஸ் பாண்டு ஒருவரால்தான் முடியும்.
ஜேம்ஸ்பாண்டுக்கு உடனே போன் செய்கிறேன்!
ஜேம்ஸ்பாண்ட்! கமிஷனர் உங்களுடன் பேச விரும்புகிறார்...

நான் ஜேம்ஸ்பாண்ட் பேசுகிறேன்!
உங்களுக்கு ஓர் அவசர வேலை...
இதோ புறப்பட்டு வருகிறேன்!
ஜேம்ஸ்பாண்ட் வந்துகொண்டிருக்கிறார். உடனே அவரை ஜமைக்காவுக்கு அனுப்பி வைத்து விடலாம்.
அதேநேரம்— ஜமைக்காவில் பிரிட்டிஷ் இரகசியப் போலீஸ் முகாமில்—
மேரி! ஆர்தரை ஏற்றிச் செல்ல விமானம் வருகிறது.
தங்கத் தோட்டாவுக்கு இன்னொரு பலியா?
ஆர்தர் உயிரோடு இருக்கிறாரே, அதுவே அதிருஷ்டந்தான், கமாண்டர்.

ஆர்தர் எப்படித் தாக்கப்பட்டார் என்றே தெரிய வில்லையே!
விமானம் வந்தது.
ஆர்தருடன் நான் விமானத்தில் போகிறேன். நீ மருத்துவ மனைக்கு வந்துவிடு, மேரி.
மருத்துவமனையில்-
ஆர்தர் பேசி னாரா?
வாயைத் திறக்க வில்லை! ஏதோ நடந்திருக்கிறது.
ஆபீசுக்குப் போனதும், லண்டனுக்குத் தகவல் கொடுத்து விடு..
ஒரு கோப்பை கமிஷனர் பார்த்துக் கொண்டிருந் தார்.
சார், நான் உள்ளே வரலாமா?
தங்கத் துப்பாக்கி வைத்திருக்கும் டிங்கா பற்றிய கோப்பைத்தான் படித்துக் கொண் டிருந் தேன்.
மேரியிடம் இருந்து செய்தி.

மீண்டும் தங்கத் துப்பாக்கிதான். இந்த முறை நம் இன்ஸ்பெக்டர் ஆர்தர்.
நல்லவேளை, ஆர்தர் உயிருடன் இருக்கிறார். அவர் மூலம் டிங்கா பற்றிய துப்பு நமக்குக் கிடைக்கும்.
ஆனால், மேரியுடன் தொடர்பு கொண்டேன். ஆர்தர் வாயைத் திறக்கவே அஞ்சுகிறாராம். எந்தத் தகவலும் சொல்ல வில்லையாம்.
ஆர்தரை லண்டனுக்கு அனுப்பச் சொல்லி உடனே தகவல் கொடுங்கள்.
நாம் இங்கே பார்த்துக் கொள்ளலாம்.

இப்பொழுது ஜேம்ஸ்பாண்ட் வருவாரா?
முதலில் ஆர்தரை சந்தித்துப் பேசச் சொல்லுவேன். ஜேம்ஸ் பாண்ட் பிறகு ஜமைக்காவுக்குப் போவது தான் நல்லது.
லண்டன் மருத்துவமனையில் ஆர்தர் சேர்க்கப்பட்டார்.
ஆர்தர்! நீங்கள் லண்டன் வந்து விட்டீர்கள்.
இனி பயப் படத் தேவை யில்லை. உங்களை சுட்டது யார்? சொல்லுங்கள்.
இரகசியப் போலீஸ் அதிகாரிகள் சந்தித்துப் பேசினார்கள்.
ஆர்தரை எப்படிப் பேச வைப்பது?
ஜேம்ஸ் பாண்ட்டை அனுப்ப லாம். இருவரும் பழைய நண்பர்கள்.
மாலை நேரம். ஆர்தரை தள்ளு வண்டியில் வைத்து ஒரு நர்சு தள்ளிக் கொண்டு போனாள்.
ஜேம்ஸ்! நீ சந்திக்க இதுதான் சரியான நேரம். ஆர்தருடன் நீ பேசிப் பாரேன்.
கமிஷனர் ஜேம்ஸ்பாண்ட்டை வரவழைத்து பேசினார்.

அலோ, ஆர்தர்!
ஆர்தர் திரும்பிக் கூடப் பார்க்க வில்லை.
ஆர்தர்! உனக்கு என்ன ஆயிற்று?
யாரோ துப்பாக்கியால் சுட்டதில் அவர் ஒரு காலை இழந்து விட்டார்.
அதுக்காக பேசக் கூடாதா?
இன்னொரு காலும் போய் விடக் கூடாதே என்ற பயமாக இருக்கலாம்!
ஏய்... நீ என்ன சொல்லு கிறாய்?
நான்... நான்... வேடிக்கை யாகச் சொன்னேன். வருகிறேன்.
நர்சு மீது ஜேம்ஸ் பாண்ட்டுக்கு சந்தேகம் வந்தது.
ஜேம்ஸ்பாண்ட்மருத்துவமனை நீச்சல் குளத்துக்குக் குளிக்கப் போனார்.
என்ன இங்கே குளிக்க வந்து விட்டீர்கள்?
இங்கே தண்ணீரில் மருந்து கலக் கிறார்கள். அது உடம்புக்கு நல்லது.
ஆமாம், ஆர்தர் எப்படி இருக்கிறார்?

உம்... வாயே திறக்க மாட்டேன்கிறார்.
உன்னைப் போன்ற அழகான பெண்ணுடன் பேசாதவன் பைத்தியக்காரனாத்தான் இருப்பான்!
நர்சு அறைக்குத் திரும்பினாள்
சாப்பிடலாமா? வாருங்கள், சாப்பாட்டு அறைக்குப் போவோம்.
எங்கே போகிறார்? உடனே செய்தி அனுப்ப வேண்டும்.
உங்கள் மருந்தை அறையில் வைத்து விட்டு வந்து விட்டேன். போய் எடுத்து வருகிறேன்!
நர்சு அறைக்கு வந்து வயர்லசை எடுத்தபொழுது, கதவு திறந்து கொண்டது!
கிர்ச்!

அறைக்குள் ஜேம்ஸ்பாண்ட் நுழைந்தார்.
அதிர்ச்சியாக இருக்கிறதா? உன்னைப் பார்த்த அன்றே உன் மீது சந்தேகம் வந்து விட்டது.
உன் பெயர் என்ன? எத்தனை நாளாக இங்கே வேலை செய்கிறாய்?
என் பெயர் தாஜ். இங்கே நிரந்தர நர்சு...
இதற்கு மேல் எதுவும் கேட்காதீர்கள், டியர்!
உன் சாகசம் என்னிடம் செல்லாது. எனக்கு உண்மை தெரிய வேண்டும்!
ஆர்தர் இந்நேரம் சாப்பிட்டு முடித்து இருப்பார். மருந்து கொடுக்க வேண்டும். வருகிறேன்!

இவள் டிங்கா கூட்டத்தை சேர்ந்தவளாக இருப்பாளா?
ஜேம்ஸ்பாண்ட் டாக்டரை சந்தித்தார்.
டாக்டர்! நர்சு தாஜ் இங்கே எப்படி வேலையில் சேர்ந்தாள்?
ஓ! அவள் உன்னையும் கவர்ந்து விட்டாளா?
ஆமாம், டாக்டர். ஆனால், அவளது அழகால் அல்ல.
அவளது நடத்தையால் என்னைக் கவர்ந்துவிட்டாள்.
மறுநாள்—
ஆர்தரை எங்கே சந்தித்தார்? நர்சு பின்னே சுற்றுகிறார்!
இந்த ஜேம்ஸ்பாண்டுடன் இதுதான் தொல்லை. அழகான பெண்ணைப் பார்த்தால், பின்னேயே போய்விடுவார்!
இப்பொழுது எங்கே வந்திருக்கிறோம்?
துப்பாக்கிப் பயிற்சி பெறும் இடத்துக்கு!
ஜேம்ஸ்! தங்கத் துப்பாக்கிக்காரன் மிக ஆபத்தானவன். அவனை சந்திக்கத் தனிப் பயிற்சி வேண்டும்.
என் திறமையை நீங்கள் பார்த்தது இல்லையே? கொடுங்கள்!

ஊஞ்சலாடும் அந்த பொம்மையைச் சுட வேண்டும்!
டுமீல்...
டுமீல்...
ஊகூம், போதாது ஜேம்ஸ்!
ஒரு குறிகூடத் தப்பவில்லையே, கமாண்டர்!
ஆனால், ஒரு குண்டுக்கும் இன்னொரு குண்டுக்கும் இடைவெளி நேரம் செகண்டு இருக்கிறது. தங்கத் துப்பாக்கியைச் சந்திக்க இந்த வேகம் போதாது.
மின்னல் வேகத்தில் பாயும் என் குண்டு
ளைப் பாருங்கள்!

பயிற்சி முடிந்து கமிஷனர் அலுவலகத்துக்குத் திரும்பினார்கள்.
சார், நான் எப்பொழுது ஜமைக்காவுக்குப் புறப்படுவது?
ஒரு படம் நியூயார்க்கில் இருந்து வரவேண்டி இருந்தது.
இந்தப் படந்தான். இவன்தான் டிங்கா
இவனைத்தான் தங்கத் துப்பாக்கிக்காரன் என்கிறார்கள்.
சர்வதேசக் கடத்தல் கும்பல் தலைவன், இவன்
கஞ்சா, அபின், போதை மாத்திரை, ஆயுதங்கள், தங்கக்கட்டி.... இவன் கடத்தாத பொருளே இல்லை.
உலகிலேயே மிக வேகமாக சுடக்கூடியவன், டிங்கா, எத்தனை பேரை சுட்டுக் கொன்றிருக்கிறான், தெரியுமா?

இன்று உலகின் நம்பர் ஒன் கடத்தல்காரன் டிங்கா, தான்!
அவனுக்கு எதிராக யாரும் வாயைத் திறக்கக்கூடாது. திறந்தால், அவர் உயிர் இருக்காது.
ஓ! அதுதான் ஆர்தர் வாயைத் திறக்கவில் லையா?
வாயைத் திறந்தால், அடுத்த நிமிடம் ஆர்தரின் உயிர் இருக்காது.
அந்த டிங்காவை உயிரோடு விடுவதே தப்பு!
ஆர்தர் தகவல் கொடுத்தால். டிங்காவை எளிதாகப் பிடித்துவிடலாம்.
டிங்காவைப் பார்க்கப் போகிறேன் என்று தெரிந்தால், ஆர்தர் என்னுடன் பேசக்கூடும்!

ஜேம்ஸ் மருத்துவ மனைக்கு வந்தார்.
உள்ளே வரலாமா?
ஓ! தாராள மாக!!
நீ கொஞ்சம் வெளியே இருக் கிறாயா? ஆர்த ருடன் நான் தனியே பேச வேண்டும்.
அவர் பேசுவாரா? பேசுங்களேன்! நான் வெளியே போகிறேன்.
சன்னல் ஓரமாக தாஜ் பதுங்கி நின்றாள்.
டிங்காவைப் பிடிக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக் கிறது. அதற்கு உன் ஒத்துழைப்பு வேண்டும், ஆர்தர்.
டாக்டரின் அறை
ஆர்தர் பேசுவார் என்று நினைக்கிறீர்களா, டாக்டர்?
நண்பனின் உயிரைக் காப்பாற்றப் பேசக்கூடும்.
என் உயிரைப் பற்றி உனக்குக் கவலை இல்லையா, ஆர்தர்?
ஆனால், ஆர்தர் வாயைத் திறக்கவில்லை. விட்டத்தைப் பார்த்தபடி படுத்திருந்தார்.
உன்னை முடமாக்கிய 'வனைப் பழிவாங்க நான் போகிறேன். என் வாழ்வும் சாவும் உன் கையில்தான் இருக்கின்றன.

நீ உயிருக்குப் பயந்தவன் என்றால் பேசவே வேண்டாம், ஆர்தர். ஆனால், நான் உயிரைப் பற்றிக் கவலைப்படவில்லை. தங்கத் துப்பாக்கியைச் சந்திக்கப் புறப்பட்டுவிட்டேன்!
நீ ஒரு முட்டாள்!
ஜேம்ஸ்! என் வாயைக் கிளறாதே! போ! போய் விடு,
மனந்திறந்து பேசினால், உன் துயரமெல்லாம் வடிந்துவிடும், ஆர்தர்!
பேசுகிறேன். அதனால் யாருக்கும் எந்தப் பயனும் இருக்காது!

சன்னல் பக்கம் நிழல் தெரிவதை ஜேம்ஸ் கவனித்தார்.
நிச்சயம் உனக்குப் பயன் உண்டு, ஆர்தர். பேசு!
பேசுவதற்கு ஒன்றுமில்லை ஜேம்ஸ்... நான் தூங்கப் போகிறேன்...
நினைத்தேன், நீயாகத்தான் இருக்கும் என்று!
முதலில் உன்னைத்தான் பேசவைக்க வேண்டும். வா!
என்னை விடு!

உன்னைக் கடிக்கச் சொல்ல வில்லை. பேசு!
மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை நர்சு எடுத்தாள்!
ஜேம்ஸ்! உன்னைக் கொல்ல தங்கத் துப்பாக்கி தேவை யில்லை. இது போதும்!
டுமீல்...!
ஜேம்ஸ் அவள் மீது புயலாகப் பாய்ந்தார்!

துப்பாக்கிச் சத்தம்... ஆர்தர் அறையில் இருந்து!

ஓ! ஆர்தர் மீது குண்டு பாய்ந்து செத்து விட்டார்!!
இவளும் சயனைடு கேப்சூலை விழுங்கிவிட்டாள் போலிருக்கிறதே!


என் அண்ணனைக் காப்பாற்றத்தான் இப்படி நடந்து கொண்டேன்.
என் அண்ணன்... தான் மார்க்

இறுதிமூச்சு அடங்கி விட்டது!
இப்படி ஒரு நர்சை எப்படி இத்தனை நாளாகக் கவனிக் காமல் விட்டோம்?
உயிரோடு பிணமாக இருப்பதைவிட சாவது மேல்!
அடுத்து சாகப்போவது ஜேம்ஸ் பாண்டா? டிங்காவா?
ஜேம்ஸ்பாண்ட் ஜமைக்காவுக்குப் புறப்பட்டார்.
டிங்கா பற்றிய எல்லா விவரமும் இதில் இருக்கிறது!
ஏற்கனவே இருக்கும் நம் ஆட்கள் உங்களுக்கு எல்லா உதவியும் செய்வார்கள்.
லண்டன் விமான நிலையம்.

உங்களுக்குப் பிடித்தமான மேரி கூட ஜமைக்காவில்தான் இருக்கிறாள்!
டிங்காவின் கதையை முடிக்காமல் நான் திரும்பி வரமாட்டேன்!
நீங்கள் வெற்றியுடன் திரும்பி வருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது!
ஜேம்ஸ்பாண்ட் ஜமைக்கா விமான நிலையத்தில் போய் இறங்கினார்.
நான் இங்கே வரும் செய்தி, எதிரிகளுக்கு எப்படியாவது தெரிந்து இருக்குமா? உடனே வெளியே போக வேண்டாம்! பொறுத்துப் போவோம்.
Gleaner
பிறகு போன் செய்தார். மேரி எடுத்தாள்.

நீங்கள் இங்கே வருவது, நல்லது அல்ல. சொர்க்கம் ஓட்டலுக்கு வந்து விடுங்கள்!
மேரி! உன்னை உடனே பார்க்க வேண்டும். நீயும் ஓட்டலுக்கு வந்துவிடு.
உங்களுக்காக அங்கே காத்துக்கொண்டு இருப்பேன்!
ஜேம்ஸ்பாண்ட் ஓட்டலுக்குப் போனார்.
ஜேம்ஸ்! உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாகி விட்டது!
நான் எங்கே இருந்தாலும் உன்னை மறப்பது இல்லை!
ஆனால், நான் இங்கே வந்திருப்பது...
79
எனக்குத் தெரியும், ஜேம்ஸ்! தங்கத் துப்பாக்கிக்காரனை சந்திக்க அது உங்களால்தான் முடியும்.

அவன் எங்கே இருக்கிறான்?
தென்ஜமைக் காவில்!
கரும்புத்தோட்டம் வைத்திருப்பது போல நடித்துக் கொண்டிருக் கிறான். ஓர் ஒட்டலும் கட்டிக்கொண்டிருக் கிறான்.
அவனைப் பார்க்க வேண்டுமே?
நெருங்க முடியாது. கரும்புத் தோட்டத்துக்குத் தீவைத்து விடுவான்.
நெருப்புக்குப் பயந்தால் முடியுமா?
நிறைய ஆட்களும் வைத்திருக்கிறான். பயங்கர ஆயுதங்களைத் தாராளமாகப் பயன்படுத்துகிறான்.
உன்னோடு இருக்கும் கேப்டன் ரோஸ் எங்கே?
டிங்காவின் கை ஆள் ஒருவன், மார்க் என்று பெயர். அவனைப் பின்தொடர்ந்து கேப்டன் போயிருக்கிறார்.
மார்க் எங்கே இருக்கிறான்?

ஓர் ஓட்டலில்
நான் அந்த ஓட்டலுக்குப் போக வேண்டும்.
அது ஆபத்தான இடம் ஜேம்ஸ்!
பயப் படாமல் போய் வா, மேரி!
ஜேம்ஸ்பாண்ட் தனியே கிளம்பினார்.
இதுதான் மேரி சொன்ன ஓட்டலா?
வெளியில் நின்றபடி ஓட்டலை நோட்ட மிட்டார். பிறகு உள்ளே சென்றார்.

அலோ..., நீயா? வெளியில் நின்றாய் அல்லவா?
வாருங்கள். ரூம் வேண்டுமா?
ஆமாம். நல்ல காற்றோட்டமான அறையாக வேண்டும்.
மாடியில் தான் காற்று வரும்
ஆனால் அங்கே வேண்டாம்.
தாஜ் என்று ஒரு நர்சு, உங்களுக்குத் தெரியுமா?
தாஜ்... தெரியுமே!
அவள் பேச்சை இங்கே எடுக்க வேண்டாம். ஓ...
கொஞ்சம் இருங்கள்!

இந்நேரம் வர வேண்டுமே!
பார்த்தீர்களா? என் செல்லப் பறவை. கறுப்பு என்றாலும், இனிமையாகப் பாடும்!
அதன் குரலுக்காகவே நான் வளர்க் கிறேன்!
ரொட்டி சாப்பிடுமா? நான் தரட்டுமா?
பழக்கம் இல்லாதவர் களிடம் சாப்பிடாது!
திடீர் என்று ஒரு காலடிச் சத்தம் வரவேற்புப் பெண்மணியைக் கதி கலங்க வைத்தது!

சூ... சூ... போய் விடுங்கள்!
ஏன் விரட்டு கிறாய்?
வருகிறானே, அவனுக்குப் பறவைகளைப் பார்த்தால் பிடிக்காது. சுட்டுவிடுவான்!
நீகூடக் கவன மாக இரு. அவன் என்ன சொன் னாலும் தலையை ஆட்டு. இல்லா விட்டால், சுட்டுவிடு வான். சுத்த முரடன்!
ஜேம்ஸ் தனது பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.
நீயும் துப்பாக்கி வைத்திருக் கிறாயா?
துப்பாக்கிக் காரனா? வாடா வா!

நீ யாருடா? எங்கிருந்து வருகிறாய்?
குடித்திருக் கிறாயா?
குடித்தாலும் என் குறி தவறாது!
நான் யார் என்று அவள் சொல்லவில்லையா?
கட்டாயம் சொல்ல வேண்டுமா?
அவள் சொல்லா விட்டால் என்ன? நானே சொல்லுகிறேன்!
விளையாடுகிறாயா? அல்லது, உன் குணமே இதுதானா?
விள்ளயாட்டு அல்ல!

அந்தப் பறவை கருகி விழுந்து விட்டது பார்த்தாயா?
ஆனால், நான் குருவி அல்ல!
அழாதே! வேறு பறவைகளைப் பழக்கித் கொள்ளலாம்!
மிஸ்டர்! முதலில் எனக்குப் பதில் சொல். நீ யார்? இங்கே எங்கே வந்தாய்?
துப்பாக்கியை ஏன் எடுக்கிறாய்? நாம் நண்பர்களாக இருக்கலாமே!

என் பெயர் ஜேம்ஸ். ஒரு டிராவல் ஏஜண்டு. இங்கே சுற்றுலா இடங்களைப் பார்க்க வந்தேன் நீ...?
நான் மார்க். எனக்கு இங்கே கரும்புத் தோட்டங்கள் இருக்கின்றன.
இங்கே பார்க்க நிறைய இடம் இருக்கும் போலிருக்கிறதே!
ஓட்டல் வசதி தான் பயங்கர மாக இருக்கிறது ஆனால், எனக்குப் பயமில்லை.
நீதான் துப்பாக்கி வைத்திருக் கிறாயே?
இராணுவத் திலும் பணியாற்றி யிருக்கிறேன்.
உன்னைப் பார்த்ததுமே நான் புரிந்துகொண்டு விட்டேன்!

உன் துப்பாக்கிக்கு வேலை கொடேன்.
என்ன வேலை?
நானே வேலை தருகிறேன்!
ஓட்டலில் செக்கியூ ரிட்டி வேலையா?
கைநிறைய சம்பளம் கிடைககும்! ஆயிரம் டாலர்!
ஆயிரம் டாலர்! எங்கே வேலை?
புது ஓட்டல் கட்டிக்கொண்டிரு கிறேனே, கேள்விப்பட்டாயா?
ஓட்டல் பங்காளிகளின் கூட்டம் நாளை நடக்கிறது. பெரிய புள்ளிகள் வருகிறார்கள்.
அவர்களைப் பாதுகாக்க உன்னைப் போன்ற ஒரு வீரன் தேவை.

வருகிறாயா?
உன்னை விட நான் பெரிய சூரன் அல்லவே!
ஆனாலும், பாதுகாப்புக்கு நிறைய ஆள் வேண்டும். என்ன சொல்லுகிறாய்?
ஆயிரம் டாலர் சம்பளத்தை இழக்க நான் முட்டாள் அல்ல!
ஓ.கே. ஜேம்ஸ். புறப் படலாமா?
என் கார் வெளியில் நிற்கிறது. அதுலே போகலாம்.
மார்க் முதலில் போனான்.
அவன் ஒரு பேய். கவனமாக இருங்கள்!
அதோ பெட்டி கொண்டு போகிறானே, அது முழுக்கக் கடத்தல் பொருள்– போதை மாத்திரைகள்!

சந்திக்க வேண்டிய ஆளைத்தான் நான் சந்தித் திருக்கிறேன்!
ஏறிக்கொள், ஜேம்ஸ். உன் கார் பின்னேயே வரும்.
தெரிந்தேதான் என்னை அழைத்துப் போகின்றானா?
சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்கப் போகிறேன்!
நான் என் காரிலேயே வருகிறேன்.
உன் விருப்பம். போய் ஏறிக்கொள்.

என் காரில்
எவ்வளவோ இருக்கும்.
அதெல்லாம் அவனுக்கு
ஏன் தெரிய
வேண்டும்?
புதிய ஓட்டலுக்கு
வந்தார்கள்.
இந்தாருங்கள்
சாவி, ஜேம்ஸ்.
இவ்வளவு சீக்கிரம்
என் பெயர் எப்படி
இவனுக்குத்
தெரிந்தது?
அழகான ஓட்டல்...
அருமையான
சூழ்நிலை...
ஓட்டல் வேலை
இன்னும்
முடியவில்லை!

உங்கள் அறை 24. மார்க்கு எதிரில்.
அறைகள் தயாரா?
உங்கள் அறையில் எல்லாம் தயார்.
இதுதான் உங்கள் அறை.
அறைக்குள் ஒரு பெண் இருந்தாள்.
எல்லாம் தயார் என்று இதைத்தான் சொன்னாயா?
மன்னிக்க வேண்டும். நான் ஒரு பணிப்பெண். எப்படியோ அயர்ந்து தூங்கிவிட்டேன்.
எழுந்துவிட்டாய் அல்லவா? போய் ஒரு காப்பி கொண்டுவா!
பணிப்பெண் மார்க்கிடம் வந்தாள்
என்னிடம் அவன் மயங்கவில்லை, பாஸ்!

முட்டாளே!
பளார்!
24க்கு போன் வந்தால், எனக்குத் தெரிவி!
அறை முழுக்க ஜேம்ஸ்பாண்ட் சோதித்தார்.
ஒட்டுக் கேட்கும் கருவியா?
இறைவா! உன் மீது பாரத்தைப் போட்டு நான் தூங்கப் போகிறேன்!
காலையில் ஜேம்ஸ்பாண்ட் கண்விழித்தார்.
இரவில் யாரும் அறைக்குள் வரவில்லை. நான் வைத்த கண்ணி வெடி அப்படியே இருக்கிறது!

சேட் டிரேசரை முடுக்கி வைத்தார்.
உஸ்...
உஸ்...
அது என்ன சத்தம்?
ஆற்றுக்குக் குளிக்கக் கிளம்பினார்.
யார் இவன்? என்ன பயிற்சி செய்கிறான்?
உஸ்...
உஸ்...
உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!
அவனைப் பார்த்தால் ஒரு மாதிரி தெரிகிறது. அவனது அறையை சோதனை போடு!

அறையில் சோதனை நடந்தது!
பையில் ஒன்றும் இல்லையே!
இதை ஏன் தனியே வைத் திருக்கிறான்.
ஆ! உள்ளே கத்தி!
ஆற்றில் ஒரு பெண் குளித்துக்கொண் டிருந்தாள்.
நீயும் ஓட்டலில்தான் தங்கியிருக் கிறாயா?
இன்று இரவு காபரே ஆட வந்திருக்கிறேன்!
இந்த ஆற்றில் படகு கூடப் போகி றதா?
அது பாதுகாப்புப் படகு!
111

ஒட்டல் இன்னும் திறக்கப்படவேயில்லை. அதற்குள் இவ்வளவ பாதுகாப்பா?
ஊகூம்! இங்கு ஏதோ நடக்கிறது...
காரை எடுக்குமுன் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்வது நல்லது.
ஜேம்ஸ்பாண்ட் அறைக்கு வந்தார்.
யாரோ அறைக்குள் வந்தது போலத் தெரிகிறதே...
இதைக்கூட எடுத்துப் பார்த் திருக்கிறானே... மார்க் வேலையாகத் தான் இருக்கும்!

சற்று நேரத்தில் ஜேம்ஸ்பாண்ட் வெளியில் கிளம்பினார்.
கையில் என்ன கட்டு?
அடிபட்டு விட்டது. மிஸ்டர் மார்க் உங்களைக் கூப்பிட்டார்.
வா ஜேம்ஸ். ஓட்டலை சுற்றிக் காட்டுகிறேன். அப்பொழுதுதான் உன் பாதுகாப்பு வேலையைத் தொடங்க சரியாக இருக்கும்.
என் காரில் போகலாமா?
அங்கே, பார். டயர் பஞ்சர்! நடந்தே போகலாம்.
ஒரு முதலை வந்தது!
ஓட்டலில் சொச்ச மிச்சம் இருப்பதை இதற்குப் போடுவோம்!
இன்றும் கட்டிட வேலை நடக்கிறது.
பங்குதாரர்கள் வருமுன் வேலை முடியாது போலிருக்கிறது.

அதோ வரத் தொடங்கி விட்டார்களே!
ஜேம்ஸ்பாண்ட் குறித்துக் கொண்டார்.
என்ன குறிக்கிறாய்?
ஆட்களின் அடையாளங் களைக் குறித்துக் கொள்ளுகிறேன். பாதுகாப்புக்கு முக்கியம் அல்லவா?
பாதுகாப்புக்கு இதுதான் முக்கியம்!

வந்தவர்களை ஜேம்ஸ்பாண்ட் படமாக வரைந்து வைத்துக்கொண்டார்!
அவர்கள் எல்லாம் நமக்கு வேண்டிய வர்கள். அவர்களின் பாதுகாப்பு உன் பொறுப்பு!
வந்தவர்களுக்கு ஜேம்ஸ்பாண்ட்டை மார்க் அறிமுகப் படுத்தினான்.
இவர் நமது புதிய பாது காப்பு அதிகாரி. ஜேம்ஸ் என்று பெயர்.
நீங்கள் ஆலந்தில் இருந்து வருகிறீர்களா? உங்கள் முகம் அப்படித் தெரிகிறது.
அடடே! முகத்தைப் பார்த்தே சொல்லி விட்டாயே.
இவர்கள் எல்லாம் ஓட்டல் கூட்டாளிகள் அல்ல. கடத்தல் கூட்டாளிகள்!

எல்லாருக்கும் விருந்து நடந்தது.
ஜேம்ஸ்! இங்கே வா.
என் உதவியாளர் ஒருவர் வந்திருக்கிறார். பார்க்கிறீர்களா?
பிறகு பார்க்கிறேன் இப்பொழுது கூட்டம் நடக்கப் போகிறது.
கேப்டன் ரோஸ் வந்திருந்தார்.
ஜேம்ஸ்பாண்ட்! உங்களை அவர் அடையாளம் கண்டு கொண்டு இருப்பார் என்று நினைக்கிறேன்!
என் பெயர் ஜேம்ஸ் என்று மட்டும் சொன்னேன்!
ஆனால், பெருங்குற்றவாளிகள் எல்லாருக்கும் உங்களைத் தெரிந்திருக்கும்!
ஜேம்ஸ்! கூட்டம் தொடங்கப்போகிறது. உள்ளே வருகிறீர்களா?
இல்லை... நான் உள்ளே வரவில்லை!

உள்ளே கூட்டம் தொடங்கியது. வெளியில் ஒருவன் நின்றான்.
ஏய், நீ யார்?
இங்கே வேலை பார்ப்பவன்தான்!
நியூயார்க் ஓட்டலில் நான் மேவலை பார்க்கிறேன். இன்று இங்கே வரச்சொன் னார்கள்.
நீங்கள் யார் என்று எனக்குத் தெரியும் ஜேம்ஸ் பாண்ட். நான்கூட சி.ஐ.ஏ. ஏஜண்டுதான் இந்தக் கடத்தல் கூட்டத்தைக் கண்காணிக்க இங்கே வந்திருக்கிறேன்.
இங்கே வந்திருக்கும் அத்தனை பேரும் கடத்தல் மன்னர்கள்.
அவர்களைக் கூட்டத்தோடு பிடிக்க இதுதான் நல்ல வாய்ப்பு.
அவர்களின் பேச்சுகளை டேப் பண்ணலாம்.

இங்கேயுள்ள அறைகளுக்கு இது டுப்ளிகேட் சாவி!
வா ஜேம்ஸ்.
நான் உள்ளே வரலாமா?
கூட்டம் தொடங்கியதும் கதவைப் பூட்டிவிடு. யாரையும் உள்ளே விடாதே!
ஓகே!

கூட்டம் தொடங்கியது.
சரி, இப்பொழுது நம் விஷயத்தைப் பேசலாமா?
ஜேம்ஸ்பாண்ட் கதவை சாத்தினார்.
இந்த ஒயின் கிளாஸ் எவ்வளவோ வேலை செய்யும்!
ஒயின் கிளாஸ்சை கத வோடு பொருத்தி வைத் தார். அதற்குள் ஒட்டுக் கேட்கும் கருவி இருக்கிறது!
உஷ்...
இப்பொழுது உலக சந்தையில் தங்கத்தைவிட கஞ்சாவுக்குத்தான் அதிக விலை இடைக்கிறது...
மார்க் சட்டென்று நாற்காலியை நகர்த்தினான்.

மார்க் கதவை நோக்கி வந்தான்.
ஒரு நாற்காலி நகர்த்தப்படும் ஓசை கேட்டதுமே, ஜேம்ஸ்பாண்ட் விலகிக்கொண்டார்!
மார்க் சட்டென்று கதவைத் திறந்தான்.
எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்தேன் வேறு ஒன்றும் இல்லை!
நீங்கள் ஏதோ சொன்னீர்களே?
லண்டனில் இருந்து இரகசிய போலீஸ் ஆள் ஒருவன் இங்கே வந்திருப்பதாகத் தகவல்!

அந்த ஆள் பெயர் ஜேம்ஸ் பாண்ட் 007 நம்மைப் பிடிக்க வந் திருக்கிறான்
என்னைப் பிடிக்க எந்தக் கொம்பனாலும் முடியாது!
007 அல்ல 0007 வந்தாலும், என் துப்பாக்கிக்கு இரையாக வேண்டியது தான்!
என் தங்கத் துப்பாக்கி எத்தனை பேரைப் பலி கொண்டிருக் கிறது என்பது உங்களுக்கே தெரியும்!
எதற்கும் நாம் முன் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

கரும்புத் தோட்டங்களில் இருக்கும் நம் ஆட்களையும் எச்சரித்து வையுங்கள்!
இப்பொழுது இந்தியாவில் இருந்து கஞ்சா கடத்துவது கஷ்டமாக இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?
வேறு வழிகளில் கஞ்சா வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்.
கடல் வழியே கஞ்சா வருவதற்கும் ஏற்பாடு செய்தி ருக்கிறேன். குவைத்தில் இருந்த நம் ஆட்கள் வெளியேறி விட்டார்கள்.
அவர்களை மெக்சிகோவுக்கு அனுப்பலாம் என்று நினைக் கிறேன்.
கூடாது! எங்கள் வியாபாரம் கெட்டு விடும்!!

அதேநேரம் லண்டனில் இருந்து ஒரு செய்தி வந்தது.
007க்கு ஓர் அவசரச் செய்தி. உடனே அவரிடம் தெரியப் படுத்த வேண்டும்.
இப்பொழுது உங்கள் லாபப் பங்குத் தொகையை அறிவித்தேன்.
ஆளுக்கு பத்து மிலியன் டாலர் கொடுக்க இருக்கிறேன்!
இது ரொம்பக் குறைவு. ஒரே வியாபாரத்தில் நமக்கு இவ்வளவு லாபம் கிடைக்கும்!

என் பேச்சை மறுக்கக்கூட யாருக்கும் தைரியம் இருக்கிறதா?
சரி, ஆளுக்கு 15 மில்லியன் டாலர் தருகிறேன்!
போதாது! 50 மில்லியன் கொடுக்கலாம்!
HERE
தொழிலை நடத்துவதே நாங்கள்தான். மறந்துவிடாதீர்கள்!
நான்தான் மூளை என்பதை மறந்துவிட்டீர்களா?
சிங்கத்தின் பங்கு உங்களுக்குத்தான். மீதியை எங்களுக்குக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம்.
ஆளுக்கு நூறு மில்லியன் டாலர் கொடுத்தாலும் தகும்!
எங்களுக்கு நியாயமான பங்கு வேண்டும்!
அப்பொழுதுதான் நமது தொழிலைத் தொடர முடியும்!

நான் கொடுப்பதை வாங்கிக்கொள்ள நீங்கள் தயாரா? இல்லையா?
நாங்கள் உங்கள் கூலிகள் அல்ல!
ஆனால், நான்...
உங்களுக்கு எமன்!
டுமீல்!
ஆளே காலி!
வழக்கம் போல அப்புறப்படுத்த வேண்டியது தான்!

சொச்ச மிச்சத்தைக் கொண்டுபோய் முதலைகளுக்குப் போடுங்கள்!
வெளியில் ஒருவன் இருந்தானே... துப்பாக்கிச் சத்தம் அவனுக்குக் கேட்டிருக்குமோ?
கவலைப் படாதீர்கள். அவன் நம் ஆள்தான். வாயைத் திறக்க மாட்டான்.
திறந்தால், அவனுக்கும் இதே கதிதான்!
மார்க் வெளியில் வந்தான்.
ஜேம்ஸ்! மானேஜரை வரச்சொல்!
மானேஜர் வந்தார்.
முதலைகள் மிகவும் பசியாக இருக்கும். ஜான்சனை தூக்கிப் போக ஏற்பாடு செய்!

இரவு விருந்துக்கும் ஏற்பாடு செய்!
நான்தான்!
உள்ளே நடந்த எல்லாப் பேச்சுகளையும் பதிவு செய்து விட்டோம்!
துப்பாக்கிக் குண்டு வெடித்த சத்தம் கூடப் பதிவாகி இருக்கிறது!
மார்க்தான் தங்கத் துப்பாக்கிக்காரன் என்பது இப்பொழுது தெளிவாகி விட்டது!
மார்க்கை தூக்கில் போட இந்த ஒரு கொலை போதும்!
ஆனால், அவனது கூட்டம் முழுவதையுமே பிடித்துவிட வேண்டும்.

இன்று இரவு நடக்கும் விருந்து அதற்கு உதவியாக இருக்கும்.
அவனிடம் தங்கத் துப்பாக்கி இருக்கும்வரை அவனைப் பிடிப்பது சிரமந்தான்.
என் துப்பாக்கி அதைவிட வேகமாக வேலை செய்யக் கூடியது!
எதிரியைக் குறைத்து எடை போடாதே. அது உன்னைப் பலவீனப் படுத்திவிடும்.
ஜேம்ஸ்பாண்ட் ஓய்வு எடுத்துக் கொண்டார்.
அந்த நர்சு சொன்ன மார்க் இவன்தானா? டிங்கா என்பது இவளது செல்லப் பெயர்போலி ருக்கிறது!
இரவு விருந்து தொடங்கியது.
இன்றைய இரவு உங்களுக்கு இன்ப இரவாக அமைய வாழ்த்துகிறேன்!
உனக்கு எப்படி?

என்னைத் தீர்த்துக்கட்டத் திட்டம் போட்டு விட்டார்களா?
ஆடல் பாடலுடன் விருந்து நடந்தது.
ஜேம்ஸ்! உன் திறமையை இவர்களுக்குக் காட்ட விரும்புகிறேன்.
நான் என்ன செய்ய வேண்டும்?
துப்பாக்கி சுடுவதில் உன் திற மையைப் பார்க்க வேண்டும்.
உங்கள் துப்பாக் கியைக் கொடுங்கள்!

மார்க் துப்பாக்கியைக் கொடுத் தான்.
மிகவும் நன்றி.
டுமீல்!
ஆ
ஜேம்ஸ் சுட்ட குண்டு காபரே நடனக்காரியின் தொப்பியைத் தூக்கிச் சென்றது!
பயப்படாதே! உன் தலைக்கு ஆபத்து இல்லை. இந்தா, உன் தொப்பிக்கு 100 டாலர் வைத்துக் கொள்!
விருந்தாளிகள் உங்கள் திறமையைப் பார்க்க விரும்பு கிறார்கள். உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள்.
ஓ.கே..!
ஜேம்ஸ்! பிரமாதமாகச் சுடுகிறாய்!!

நான் சரியான ஆளைத்தான் தேர்ந்து எடுத் திருக்கிறேன்.
மிகவும் நன்றி ஆளுக்கு ஒரு பாட்டில் கொடுக்க லாமா?
குடித்து விட்டுப் பிரமாதமாக ஆடுவார்கள்!
ஜேம்ஸ்பாண்ட்டைத் தேடி மேரி ஓட்டலுக்கு வந்தாள். அங்கே ஒருவன்...
ஏய்! என் அறைக்கு வா!!
சீ! கையை எடுடா! குடித்துவிட்டு கலாட்டா செய் கிறாயா?
வரம்வரப்புப் பெண் வந்தாள்.
முட்டாளே! விருந்தாளிகளிடம் இப்படியா நடந்து கொள்வது?
ஜேம்ஸ்சைப் பார்க்க வந்தாயா? இனி அவரை உயிரோடு பார்க்கவே முடியாது!
நீ என்ன சொல்லுகிறாய்!

இனி நமக்கு இங்கே வேலை யில்லை!
குடித்துவிட்டு எல்லாரும் ஆடத் தொடங்கிவிட்டார்கள்!
தங்கத் துப்பாக்கி உண்மையாகவே வித்தியாசமாகத்தான் வேலை செய்கிறது, வேறு எந்தத் துப்பாக்கியா லும் இவ்வளவு வேகமாகக் குறி தவ றாமல் சுட முடியாது!
குளியலுக்குப் பின் ஜேம்ஸ்பாண்ட் படுத்துக்கொண்டார்.
டொக்... டொக்...
யாராக இருக்கும்?
மெல்ல சன்னல்-திரையை விலக்கிப் பார்த்தார்.

மேரி!
ஜேம்ஸ்! சீக்கிரம் ஒரு கை கொடுங்கள்!!
உஸ்... பேசாதே...
அறைக்கு வெளியில்தானே பேசுகிறோம்!
குளியறைக்குள் போ!
அறையில் ஒட்டுக் கேட்கும் கருவி வைத்திருக்கிறார்கள்!
நீ எப்படி இங்கே வந்தாய் மேரி?

நான் இங்கே இருப்பதை ஓட்டல் வரவேற்பு பெண்தான் சொன்னாளா?
ஆமாம். இங்கே நீங்கள் உயிரோடு இருப்பீர்கள் என்ற நம்பிக்கையே அவளுக்கு இல்லை.
உங்களிடம் ஓர் அவசரச் செய்தியைச் சொல்லத்தான் ஓடிவந்தேன்!
நீங்கள் ஜேம்ஸ்பாண்ட் என்ற தகவல் எப்படியோ இங்கே வந்து விட்டது.
எனக்கும் தெரியும். இரு அமெரிக்க சி.ஐ.ஏ. ஆட்களும் இங்கே வந்திருக் கிறார்கள்.
எல்லாருமாகச் சேர்ந்து, இந்தக் கூட்டத்தைப் பிடிக்க இருக்கிறோம்.
முடியுமா?
முயற்சி செய்தால், முடியாதது என்று எதுவும் இல்லையே!

இரவு விருந்து முடிந்து எல்லாரும் நன்கு தூங்கிக் கொண்டு இருக் கிறார்கள். இப்பொழுது வேலையை முடித்து விடலாமே?
ஆமாம், அந்தத் தங்கத் துப்பாக்கியைப் பார்த்தீர்களா?
அப்பொழுது குளியறையில் உள்ள அலமாரி யின் கதவு மெல்லத் திறந்தது!
தங்கத் துப்பாக்கி அபார ஆற்றல் படைத்ததுதான்!
நீங்கள் கவனம் ஜேம்ஸ்!
நீயுந்தான் மேரி. என் உயிரைவிட உன் உயிர் எனக்கு முக்கியம், அன்பே!
உங்கள் இருவர் உயிரும் இப்பொழுது என் கையில்!

மார்க் வந்தான்.
இத்தனை கட்டுக் காவலை மீறி நீ எப்படி இங்கே வந்தாய்?
அவள் என் காதலி. இங்கே ஒரு கம்பெனியில் வேலை பார்க்கிறாள். என்னை சந்திக்க வந்திருக்கிறாள்.
எனக்குக் காது குத்துகிறாயா?
போகட்டும். எனக்கு நீ வேண்டும். அவளை வந்த வழியே வெளியே அனுப்பு!
நீ எப்படி உள்ளே வந்தாய் என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் உன்னை வெளியே அனுப்புகிறேன். சன்னல் வழியே உள்ளே வந்தாயா? சரி, போ!
அவரை ஆபத்தில் விட்டுவிட்டு நான் எப்படி தனியே போவேன்?

குபீர் என்று ஒருவன் அவள் மீது பாய்ந்தான்!
ஜேம்ஸ்! உன்னை இன்னும் நம்பு கிறேன். என்னை ஏமாற்ற நினைத்தால் என் தங்கத் துப்பாக்கி உன்னைத் தூள் பரத்தி விடும்!
நாளைக் காலை நாங்கள் எல்லாரும் ஒரு குட்டி ரெயிலில் பிக்னிக் போகிறோம்:
என் பாது காப்புக்காக நீயும் என்னோடு வருகிறாய்!
சே! இப்படிக் கண்ணாமூச்சி விளையாடிக்கொண்டு இருக்கிறேனே!
மார்க் தனது அறைக்குத் திரும்பினான்.
மேரி இப்பொழுது எங்கே இருக்கிறாள்?

ஓ.கே, பாஸ்! அப்படியே செய்கிறேன்!
மார்க் உடற் பயிற்சி செய்து கொண்டிருக்கிறான். இதுதான் சரியான நேரம்.
மார்க் அறைப் பக்கம் ஜேம்ஸ் வந்தார்.
யாரையும் காணோம்!
கள்ளச் சாவியை இப்பொழுது பயன் படுத்தலாம்.

ஜேம்ஸ்பாண்ட் அந்த அறைக்குள் போனார்.
தங்கத் துப்பாக்கி கூட இங்கே இருக்கிறதே!
ஒரு குண்டை உருவிவிட்டால்... எனக்கு ஒரு விநாடி நேரம் கிடைக்குமே!
அதே நேரம்—
உம்... நட! சத்தம் போட்ட உன் உயிருக்கே ஆபத்து!
அவன் ஜேம்ஸ்பாண்ட் தான் என்பது உறுதியாகிவிட்டது. அவனுக்கு இந்த ரெயில் பயணந் தான் கடைசிப் பயணம்!
ஜேம்ஸ்! வர வில்லையா? நேரமாகி விட்டது!

மேரியைக் கொண்டு போய் விட் டார்களா?
எல்லாம் நம் திட்டப்படி நடக்கிறது, மார்க்!
ரெயில் நிலையத்தில் எல்லாரும் கூடினார்கள்.
எல்லாம் தயாரா!
புறப்பட வேண்டியது தான்!
அதேநேரம், மேரியை காரில் கொண்டு போனான்.
உன்னைப் போன்ற வீராங்கனைகள் மரணத்தைப் புன்னகை யோடு வரவேற்க வேண்டும்!
நாம் இப்பொழுது ஒரு தீவுக்குப் போகிறோம்.
அங்கே விருந்துக்கும், ஆடல் பாடலுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன்.
எல்லாரும் துப்பாக்கி வைத்திருக்கிறீர்களா?
எடுத்துக்கொள் ளுங்கள். வழிநெடுக வேட்டையாடலாம்! பறவைகள், மான்கள், புலிகள் கூட இருக்கின்றன!

வாருங்கள்.
ல்லாரும் ரெயிலில்
ஏறுங்கள்!

ஜேம்ஸ்! நீ டிரைவர்கூட உட்கார்ந்து கொள். அப்பொழுதுதான் எதிரிகள் வந்தால் பார்க்க முடியும்.
செடி கொடி இடையே இருந்து நானகு கண்கள் பார்த்துக் கொண்டிருந்தன!

டுமீல்...!
போகலாம்!

தங்கத் துப்பாக்கியில் முதல் குண்டு வெடிக்கவில்லை. 2-வது குண்டுதான் வெடித்தது.
எனக்கு ஒரு விநாடி இடைவெளி கிடைக்கும் என்று நினைத்தேனே!
ஒரு குண்டு என்ன ஆயிற்று?
நீ இந்தப் பக்கம் வந்திருக் கிறாயா?
இல்லை. இதுதான் முதல்தடவை. அழகா இருக்கிறது.
உண்மையில் தங்கத் துப்பாக்கிக்கு நேராக நான் நிறுத்தப் பட்டிருக்கிறேன்!
ரெயில் கிளம்பியதும் பின்னேயே ஒருவன் ஓடிவந்தான்!


துப்பாக்கிகள் வெடித்தன. பறவைகளை சுட்டார்கள்.
ஜேம்ஸ்! உன் மீது படவில்லையே. ஒரு முயலைக் குறி வைத்தேன்.
திடீர் என்று டிரைவர் ரெயிலின் வேகத்தைக் குறைத்து, நீண்ட விசில் கொடுத்தார்!
நிறுத்தாதே! போடா!!

என்ன ஆயிற்று?
நீயே பார், தண்டவாளத்தை... ஏதோ வெள்ளையாக...
நண்பர்களே! பாருங்கள்! ஓர் ஆங்கிலப் படம் பார்ப்பது போல இருக்கும்!
ஓடும் ரெயிலில் ஜேம்ஸ் பாண்ட். ரெயில் பாதையில் அவனுடைய காதலி கட்டப்பட்டு கிடக்கிறாள்!
ரெயில் வேகமாக வந்துகொண்டு இருந்தது!
ஜேம்ஸ்பாண்ட் ரெயிலை நிறுத்தினார். ஆனால், ரெயில் நிற்கவில்லை. மைக் ஏற்கனவே பிரேக்கைக் கழற்றிவிட்டிருந்தான்.
கால்– கை கட்டப்பட்டு மேரி தண்டவாளத்தில் கிடந்தாள்!

ஜேம்ஸ்பாண்ட் கீழே குதிக்க முடியாதபடி டிரைவர் மிரட்டினான்!
என் கையில் என்ன இருக்கிறது, பார்த்தாயா? மரியாதையாக விலகு!
டுமீல்...!
டுமீல்...!
மார்க சுட்ட குண்டு ஜேம்ஸ்பாண்ட் மீது பாய வில்லை. டிரைவரைப் பலிகொண்டது!
டுமீல்...!
கண் இமைக்கும் நேரமே இருந்தது!

மார்க் சுடடுக் கொண்டே இருந்தான்.
டுமீல்...!
மேரி!
சே! இது வெறும் பொம்மை!!
ஒரு பாலத்துக்கு அருகே மேரி வைக்கபட்டிருந்தாள்.
பாவம், ஒரு பொம்மையை நீ என்று நினைத்து ஜேம்ஸ் காப்பாற்ற முயன்றான். அவன் செத்ததுதான் மிச்சம்!
ரெயில் வருகிறது. உன்னை ஏற்றிச் செல்லும். இன்று உன் நடன விருந்துதான்!

சட்டென்று
படார்!
இங்கேயே ஆடுகிறேன்!
ரெயில் நிற்கக்கூடாது. இறங்கி தப்பி ஓடி விடுவார்கள். முழுவேகமாகப் போவதே நல்லது!
ஜேம்ஸ்பாண்ட் தொடர்ந்து சுட்டார்!
டுமீல்...
மார்க் கையில் ஒரு குண்டு பாய்ந்தது!
ஆ...!
சி.ஐ.ஏ. ஏஜண்டு ரெயில் மீது ஏறினார்!
துப்பாக்கிகளைக் கீழே போடுங்கள்!
பீலிக்ஸ் நல்ல நேரத்தில் வந்தார்!
உம்... கீழே போடு!

பீலிக்ஸ்! அவன் கையை ஏற்கனவே நான் சுட்டு விட்டேன்!
பாலத்தில் மேரி கொடுத்த உதையில் தடியன் கீழே விழுந்தான்!
இன்னோர் உதை வேண்டுமா?
அவனது கத்தியை மேரி எடுத்தாள்.
பாலத்துக்கு அடியில் வெடிகள் வைக்கப் பட்டிருந்தன!
ஜேம்ஸ்பாண்ட்! இவர்களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!

அவன் ஜேம்ஸ்பாண்ட் என்று நான் முன்பே சொன்னேன்!
நானுந்தான்!
ஜேம்ஸ் பாண்ட்! கீழே குதி!!
ஜேம்ஸ்பாண்ட் என்ஜினில் இருந்து கீழே குதித்தார்.
பீலிக்சும் குதித்தார்.
இன்னொர் ஆளும் குதித்தான்!
மார்க் தப்பி விட்டான்!

ஏன் மார்க் குதித்து விட்டார்?
அதுதான் புரிய வில்லை!
அதேநேரம் ரெயில் பாலத்தை நெருங்க...
டமார்!
அந்தக் கூட்டமே காலி! மார்க் தப்பிவிட்டானே!

முதலில் பீலிக்சைக் காப்பாற்ற வேண்டும்!
பீலிக்ஸ்...
கீழே குதித்ததில் எனக்கு ஒரு கால் முறிந்துவிட்டது ஜேம்ஸ். மார்க்கை நீ கவனி!
முதலில் உங்களைப் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டுப் போகிறேன்!
இங்கே செடி கொடிகள் அடர்த்தியாக இருக்கின்றன. இங்கே இருங்கள்.
அதேநேரம் மேரி...
என் ஜேம்சும் இதே ரெயிலில் தானே வந்தார்!

பிலீக்ஸ்! இந்தத் துப்பாக்கியைக் கையில் வைத்துக் கொள்.
ஜேம்ஸ்சைத் தேடி மேரி போனாள்!
அவசரப் படக்கூடாது! கடத்தல்காரர் களும் இதே ரெயிலில்தானே வந்தார்கள்.
யார் என்று பார்ப்போம்!
குனிந்து தூக்கிப் பார்ப்பது ஆபத்து...
மார்க் மாதிரி தெரிகிறதே!

படார்!
மார்க் அவளது காலை வாரிவிட்டான்!
நகராதே! இந்தக் கத்தி உன் மார்பில் பாய்ந்துவிடும்!
அப்படியே பின்னே நகர்ந்து போ!
அந்தத் துப்பாக்கியை என்னிடம் உதைத்துத் தள்ளு!

கீழே கிடந்த துப்பாக்கி மார்க் கைக்கு வந்தது!
உன் சட்டையை கழற்றிக்கொடு. என் நெஞ்சில் வடியும் இரத்தத்துக்குக் கட்டுப்போட வேண்டும்.
பரவா யில்லை, கழற்று!
அதேநேரம் ஜேம்ஸ் பாண்ட் மார்க்கைத் தேடி வந்தார்...
இரத்தம் சொட்டுச் சொட்டாகக் கிடக்கிறதே!
நீயே கட்டுப்போடு. வேறு ஏதாவத செய்ய முயற்சி தால், துப்பாக்கிக் குண்டு உன் தலையைத துளைத்துவிடும்!
இரத்தக் காயம் பட்டிருந்த ஜேம்ஸ்பாண்ட், தள்ளாடித் தள்ளாடி வந்தார்!
உன்னை வைத்துத்தான் நான் தப்பவேண்டும். உம்... நட!

கீழே விழுந்ததில், ஜேம்ஸ் பாண்ட்டின் காயத்தில் இரத்தம் பெருகியது!
மார்க் தப்பிவிடக் கூடாதே!
ஜேம்ஸ்சை மேரி பார்த்துவிட்டாள்!
உம்... அப்படியே நில்! நீதான் எனக்கு அரண்!
ஜேம்சை கூப்பிடு!
ஜேம்ஸ்! மார்க் இங்கேதான் இருக்கிறான்!
அவன் என்னை நெருங்கி விடுவானோ?
மார்க் பிடியில் மேரி! ஆபத்து இல்லாமல் அவளை மீட்க வேண்டும்!

ஜேம்ஸ்பாண்ட் மெல்ல நெருங்கிச் சென்றார்!
இதற்குமேல் போவது ஆபத்து!
ஏன் நின்று விட்டாய்? வா!
துப்பாக்கியைக் கீழே போடு!
என் கத்தி மேரியின் கழுத்தில்! அவள் துப்பாக்கி என் கையில்!!
துப்பாக் கியைக் கீழே போடு! இல்லாவிட்டால், என் கத்தி அவள் மார்பில் இறங்கும்!!

மேரியை காட்டி தப்பிவிடலாம் என்று நினைக்காதே!
ஜேம்ஸ்! என்னை என்ன முட்டாள் என்று நினைத் தாயா?
நீ வராவிட்டால் பரவாயில்லை. மேரியை நான் கொன்றுவிடுகிறேன்!
மேரியை ஒன்றும் செய்து விடாதே
அப்படி யானால் நீ துப்பாக் கியைக் கீழே போடு!
உன்னை நம்பலாமா?

நம்பித்தான் ஆக வேண்டும். இல்லா விட்டால், மேரி பிணமாகி விடுவாள்!
இன்னும் என்ன தாமதம்? உன் காதலியின் உயிரைக் காப் பாற்றப் போகி றாயா? இல் லையா?
மேரி உயிருடன் இருக்கிறாளா என்பது தெரியவில்லையே!
நான் அவ்வளவு முட்டாள் அல்ல! என் கத்தி அவளது கழுத்தில் இருந்து நகராது!!
அவளைக் கீழேவிடு! நான் பார்க்கிறேன்!

உன்னை சுடுவதைத் தவிர வேறு வழி யில்லை!
ஜேம்ஸ்பாண்ட் சுடமுடியாத நிலை.
மேரி மீது குண்டு பட்டுவிடக் கூடாதே!
ஆனால், மார்க் சுடுகிற நிலையில் இருந்தான்!
டுமீல்....!
குண்டு குறி தவறிப் போயிற்று!
இது உன் தங்கத் துப்பாக்கி அல்ல! சாதாரணத் துப்பாக்கி.
இந்தத் துப்பாக்கியில் இன்னும் நாலு குண்டு இருக்கிறது!

அதில் ஒரு குண்டாவது நிச்சயம் உன் உயிரைக் குடிக்கும்.
டுமீல்...!
மீண்டும் உன் குறி தவறி விட்டது!
3-வது குண்டு மார்பில் பாய, ஜேம்ஸ்பாண்ட் சுருண்டு விழுந்தார்!
மேரி...!
என் குறி தவறாது, தெரிந்து கொள்!

இன்னும் ஒரு குண்டு இருக்கிறதே? அவனது சாவை உறுதி யாக்கிவிட வேண்டும்!
யார்க் கடைசிக் குண்டை குறி வைத்தார்!
டுமீல்...!
இதோடு அவனது மரணம் நிச்சயம்!
மேரி தட்டிவிட்டாள்!
குண்டு தீர்ந்தது!
முதலில் இவளைக் கொன்றிருக்க வேண்டும்!
அதேநேரம் ஜேம்ஸ் பாண்ட் சுட்டார்!

மார்க் சுருண்டு விழுந்தான்.
ஆ...!
டுமீல்...!
ஜேம்ஸ்பாண்ட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
வரச்சொல்லுங்களேன்!
உங்களைப் பார்க்க அதிகாரிகள் வந்திருக்கிறார்கள்.
குட்மார்னிங் ஜேம்ஸ்பாண்ட்!

ஜேம்ஸ்பாண்ட்டின் வீரச் செயலுக்காக ஜமைக்கா அரசாங்கம் இந்தத் தங்கப் பதக்கத்தைப் பரிசளிக்கிறது'
மேரி! இந்தப் பதக்கத்தில் உனக்கும் பங்கு உண்டு!
சிலநாள் கழித்து
ஜேம்ஸ்! உங்களுக்கு லண்டனில் 'சர்' பட்டம் கொடுத்திருக்கிறார்கள்! இது எவ்வளவு பெரிய சிறப்பு தெரியுமா?

எனக்குத் தெரியும்
ஆனால், என் பெயருக்குமுன் 007 என்று போட்டுக் கொள்வதையே மிகப் பெரிய சிறப்பாக நான் நினைக்கிறேன்!
இருவரும் லண்டனுக்குத் திரும்பினார்கள்.
ஜேம்ஸ்! உங்களுக்கு ஒரு மாத ஓய்வு கொடுத்திருக் கிறார்கள். எங்கே போகிறீர்கள்?
எங்கே போனாலும் நீயும் என்னுடன் வரவேண்டும்.
வருகிறேன். ரோம் போகலாமா?
போகலாமே நான் ரோமியோ! நீ ஜூலியட்!
(முடிந்தது)

ரூ.500 பரிசு!

அவள் யார்?

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுப் பாருங்கள். அவற்றின் பெயர்களில் இருந்து ஓர் எழுத்தை மட்டும் எடுத்து [illegible]ப் பாருங்கள். தேவலோகத்து நடன மங்கை ஒருத்தி கிடைப்பாள். அவள் யார்? கண்டுபிடியுங்கள் பார்ப்போம். உங்களுக்காக ரூ. 500 காத்திருக்கிறது!



அவள் யார்? என்பதை (பெயரை மட்டும்) ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள். முகவரி எழுதவேண்டிய இடத்தில், இத்துடன் உள்ள முகவரியை வெட்டி ஒட்டுங்கள்!

சரியான விடை எழுதியிருந்தால் ரூ. 500 பரிசு கொடுக்கப்படும்! பல பேர் சரியான விடை எழுதியிருந்தால், பரிசுக்கு உரிய 25 பேர் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

முடிவு தேதி: 28–10–1990.

அனுப்ப வேண்டிய முகவரி:-

கண்டுபிடியுங்கள்,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

கண்டுபிடியுங்கள் - 14

பரிசு பெற்றவர்கள்:-

செப்டம்பர் 16-ந்தேதி வெளியான "ராணி காமிக்ஸ்" கண்டுபிடியுங்கள் போட்டியின் விடை:- அகத்தியர்.

நூற்றுக்கணக்கானோர் சரியான விடை எழுதியிருந்ததால், பரிசுக்குரிய 25 பேரை குலுக்கல் முறையில் தேர்ந்து எடுத்தோம்.

பரிசுத்தொகை ரூ. 500, ஆளுக்கு ரூ. 20 வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

பரிசு பெற்றவர்கள்:-

(1) டி. ஷீலா, சென்னை-44. (2) எஸ். பிரபு, விருதுநகர். (3) வி.பி. ராணி, பொதட்டூர் பேட்டை. (4) தி. நாகமுனி, வில்பட்டி. (5) எம். கிரிஜா, பைத்தாம்பாடி.

(6) பி. ரகுராமன், கடலூர். (7) பி. ஜெயலட்சுமி, பரவை. (8) ஆர். செந்தில்குமார், முசிறி. (9) டி. மஞ்சுளா, வேலாண்டிப்பாளையம். (10) ஆர். கலாவதி கோல்டுஸ்மித், கொடுந்திரப்புள்ளி.

(11) எஸ். ஆறுமுகம், விக்கிரமசிங்கபுரம். (12) ச. மகேசுவரி, திருச்சி-3. (13) டி. சாமிநாதன், உடன்குடி. (14) கே. கமலா, ராசிபுரம். (15) இரா. சரவணன், சிதம்பரம்.

(16) எஸ். ஜெயலட்சுமி, குளச்சல். (17) எஸ். முருகன், பெங்களூர்-54. (18) வி. வினிதா, திருவாரூர். (19) பி. பெரியசாமி, புதுப்பை. (20) ஏ. ராமகிருஷ்ணன், டெல்லி-95.

(21) டி. ராமலிங்கம், விழுப்புரம். (22) ஆர். ராணி, இடங்கிமங்கலம். (23) கே. ராஜா, வேலூர்-3. (24) ஏ. அகஸ்டின் ரவி, கல்லக்குடி. (25) டி. ஜாஸ்மின், சென்னை-57.

காற்றாடி எப்படி பறக்கிறது?

பட்டம் பறக்கவிடுவதென்றால் சிறுவர்களுக்கு பெருமகிழ்ச்சி. பட்டத்தை சிலர் காற்றாடி என்றும் சொல்வார்கள். பழங்காலத்திலிருந்தே குழந்தைகளும், பெரியவர்களும் இவ்விளையாட்டில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்.



பட்டம் விடுவது இந்தியாவில் மட்டும் அல்ல; சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இது ஒரு முக்கிய பொழுதுபோக்காக இருந்து வருகிறது. சீனா, ஜப்பான் முதலிய நாடுகளில் பறவை, மீன், பூதங்கள் போன்று காற்றாடிகள் செய்து பறக்கவிடுகிறார்கள்.

பட்டம் எப்படி பறக்கிறது என்பது தெரியுமா? பட்டத்தின் நடுவில் Y வடிவத்தில் காணப்படும் நூலுடன் மிக நீளமான உறுதியான நூல் கட்டப்படுகிறது. பட்டத்தின் அடிப்பாகத்தில்

காற்று மோதி விளிம்புகளின் வழியாக வெளியேறுகிறது. அப்பொழுது மேற்பரப்பில் சிறிது காற்றை உறிஞ்சிக்கொண்டு செல்கிறது. அதனால் காற்றாடியின் அடியில் அதிக அழுத்தமும், மேற்பரப்பில் குறைந்த அழுத்தமும் உண்டாகிறது. ஆகவே, பட்டம், மேலே தள்ளப்பட்டு உயரே செல்கிறது.

பட்டம் விடுவதில் போட்டியும் நடப்பதுண்டு. இருவேறு இடங்களில் நின்றுகொண்டு ஒருவர் மற்றொருவருடைய காற்றாடியை அறுத்துவிட முயல்வார்கள். அறுந்து விழும் காற்றாடி, முதலில் கைப்பற்றுகிறவருக்கு உரியதாகிவிடும். சாலைகளில் நின்று பட்டம் விடுவதால், விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதால், சாலைகளில் பட்டம் விடுவதை அரசு தடை செய்துள்ளது.



ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

அது எந்த மரம்?

ஓங்கி வளர்ந்த ஒரு மரத்தின் படமும், மூன்று மரங்களின் நிழல் படமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அதில் ஓங்கி வளர்ந்துள்ள மரத்தின் நிழல் எது? கண்டுபிடியுங்கள் பார்ப்போம்?



RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)
Regd. No. TN/MS(N)/461
பெண் சி.ஐ.டி. மாடஸ்தி
தோன்றும்
அடுத்த காமிக்ஸ்
உளவுக் கப்பல்
அமெரிக்க உளவுக் கப்பல் திடீரென்று காணாமல் போனது. அதை கடத்திச் சென்றது யார்? கடத்தல் கூட்டம் அகப்பட்டதா?
நவம்பர் 1-ந்தேதி "ராணி காமிக்ஸ்" வாங்கிப் பாருங்கள்!
"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007